# ஓர் இரவு

எவிஎம் தயாரிப்பு



கதை - வசனம்

**C.N. அண்ணாத்துரை M.A.**

## கதைச் சுருக்கம்

சீரூர் ஜமீன்தார் கருணாகரத்தேவர் சொர்ணம் என்ற பெண்ணின் வனப்பிலே தன் வாலிப உள்ளத்தை பறிகொடுக்கிறார். ஜமீன்தார் "சின்ன ஜாதிப் பெண்ணை" மணந்து கொள்ளப் போவதை அறிந்த நாட்டு மக்கள் அவரை ஜமீன் பதவியிலிருந்து விலக்க ஏற்பாடு செய்கிறார்கள். தேவர் கலக்க மடைகிறார்.

சொர்ணத்தை ஆசை நாயகியாக வைத்துக் கொண்டால் ஜமீன்தாரகவே இருக்கலாம், என்று யோசனை கூறுகிறான் கணக்கன். நம்பிக் கெட்ட சொர்ணத்தைக் கைவிட்டு ஜமீன்தார். ஜமீன் குலத்திலே ஒரு பெண்ணை மணந்து கொள்கிறார். கர்ப்பிணியான சொர்ணம் ஊரைவிட்டு ஓடிவிடுகிறாள். ரயில் தண்டவாளத்திலே தலை வைத்துப் படுக்கிறாள். வேகமாக வருகிறது ரயில்...

*　　　*　　　*　　　*

தேவரின் மகள் சுசீலா குமரியாகிறாள். அவளுக்கும் டாக்டர் சேகருக்கு மிடையே காதல்மலர்கிறது. ஆனால் சுசீலாவைத் தனக்கே மணமுடிக்க வேண்டுமெனக் கூறுகிறான் ஜெகவீரன். இடி விழுந்ததுபோலத் திடுக்கிடுகிறார் தேவர். தன் மாளிகை, சொத்து அனைத்தையும் கொடுத்து விடுவதாகக் கூறி தன் அருமை மகளை மட்டும் பலி கேட்க வேண்டாமெனக் கெஞ்சுகிறார் "என்னிடம் இருக்கும் ரகசியத்தை உலகுக்குக் காட்டி உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார்" என்று மிரட்டுகிறான் ஜெகவீரன் தேவர் நடுங்குகிறார். கடைசி முறையாகச் சந்திக்க வெளியே புறப்படுகிறாள் சுசீலா. காதல் போயிற் சாதல் தானே முடிவு.

பாலில் விஷத்தைக் கலக்கி வாயருகே கொண்டு செல்கிறாள் ஒரு உருவம் அறைக்குள்ளே வருகிறது! தலைநிமிர்ந்து பார்க்கிறாள் சுசீலா கள்ளன்! கையிலே துப்பாக்கி, கலங்கவில்லை சுசீலா. திடீரென்று ஒரு யோசனை தோன்றுகிறது அவளுக்கு. சிறிது நேரத்தில் ஜெக வீரன் அங்கு வரப்போகிறான். அந்த சமயத்தில் அன்னியனோடு காதல் நாடகமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து பலவந்த மணத்திலிருந்து தப்பித்துவிடலாம்! ஆம்! சரியான தந்திரம். களவாட வந்தவனைக் காதலனாக நடிக்கும்படி வேண்டிக்கொள்கிறாள் சுசீலா.

[மற்றவை வெண்திரை விளக்கும்]

அறிவு தரும் அரிய நூல்கள் கிடைக்கும்!
கலைமன்றம் - சென்னை-1

# வடுவூராரின் சிறந்த நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| மருங்காபுரி மாயக்கொலை | ... | 2 | 0 |
| இராஜேந்திர மோகனா | | 2 | 0 |
| வஸந்த கோகிலம் | ... | 2 | 0 |
| முத்துலக்ஷ்மி | ... | 2 | 0 |
| நீலலோசனி | ... | 2 | 0 |
| கலியாணசுந்தரம் | ... | 2 | 0 |
| நங்கை மடவன்னம் | ... | 2 | 0 |
| சிங்கார சூர்யோதயம் | ... | 2 | 0 |
| பூச்சாண்டி எம்மே! | ... | 2 | 0 |
| சோமசுந்தரம் | ... | 2 | 0 |
| டாக்டர் சோணாசலம் | ... | 2 | 0 |
| பச்சைக்காளி | ... | 2 | 0 |
| சமயசஞ்சீவி | ... | 2 | 0 |
| சொக்கன் செட்டி | ... | 2 | 0 |
| பூஞ்சோலையம்மாள் | ... | 2 | 0 |
| தங்கம்மாள் | ... | 2 | 0 |
| சிவராமகிருஷ்ணன் | ... | 2 | 0 |
| பிச்சுமுத்துக் கோனார் | ... | 2 | 0 |
| பாவாடைச் சாமியார் | ... | 2 | 0 |
| நவநீதம் | ... | 2 | 0 |
| துரைராஜா | ... | 2 | 0 |
| மாயசுந்தரி | ... | 2 | 0 |

விபரங்களுக்கு:

**ஸ்ரீமகள் கம்பெனி**
122, வரதாமுத்தியப்பன் தெரு,
சென்னை-1

**M. S. ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்,
சென்னை-1

# ஓர் இரவு பாட்டுகள்

சோர்ணம் பாட்டு: ஔவை டி. கே. சண்முகம்

எங்காடு—இது எங்காடு
எங்கும் புகழ் தங்கும் நாடு வளம்
பொங்கும் நாடு—வந்த
எல்லார்க்கும் இடங்கொடுத்து
ஏமாந்த நாடு (எங்க)

தங்க குடிசை யில்லாமே
தரித்திரமானாலும்—தலைவிதின்னு
நம்பிக்கிட்டு—சாமியெக் கும்பிடும் நாடு (எங்க)

சங்கம் வைச்சு மொழி வளத்த
தமிழ் நாடு இப்போ
தாய் மொழியைக் கதம்பம் பண்ணும்
சண்டாள நாடு
சொந்த நாட்டு மனுசனை தூக்கிப் பேசாது
சொரண்ட வந்த ஆளுக்கெல்லாம்
தொழுது மாலை போடும் நாடு (எங்க)
உலகுக் கெல்லாம் தருமம் சொல்லி
உயர்ந்த நன்னாடு
உயர்ந்த நன்னாடு—இப்போ
உயர்வு தாழ்வு பேசி பேசி
ஒத்துமை யில்லா நாடு—இது
எங்க நாடு எங்கும் புகழ் தங்கும் நாடு...

## சிவசக்தி நடனம்

பார்வதி: பூலோகம் தனைக்காண வருவீர் ஸ்வாமி-என்றும்
புகழோடு புகழாய் மாந்தரெல்லா சமமாக உயிர்வாழும்

சிவன்: பாராமல் வீண்கனவு காணாதே
நீ அறியாய் நேரினிலே
மாநிலத்தோர் மதியிழந்தே வாடும் (பூலோகம்)

பார்வதி: எண்ணத்தொலையாத சாதிச் சண்டை
எங்குபார்த்தாலும் பட்டினிக் கொடுமை
கண்ணிருந்தும் குருடாகித் தவிக்கின்ற
காட்சியை பாராதிருக்கலாமா?

சிவன்: யார் மீதிலே குற்றம் சொல்லு? மனிதர்
அறியாமல் திண்டாடும் பரிதாப நிலைமைக்கு (யார்மீதிலே)
நீரோடு நிலமும் தந்தோம்—என்றும்
நிலையான செல்வங்கள் பலகோடி தந்தோம்
சீராகப் பாடு பட்டாலே—மக்கள்
தேவைக்கு அதிகமாய் விளையும் மண்மேலே (யார் மீதிலே)

பார்வதி: காக்குந் தெய்வங் கருணாநிதியென்று
ஆலயம் கட்டி வைத்தார்—ஆறு
காலமும் பூசை அபிஷேகம் அர்ச்சனை
உற்சவம் செய்து வைத்தார்
பாரெல்லாம் மகிழ்வடைந்தால் அதுவே
பக்தர்கள் செய்யும் உற்சவமாகும்
ஊரெல்லாம் கோயில்கள் ஏன்? அடியார்
உள்ளமே எந்தன் திருக் கோயில்

இருவரும்: கேளீர் கேளீர் ஜெகத்தீரே!
கேடுகள் நீங்கி வாழ்வீரே!
திறமைக் கேற்ப உழைத்திடுவீர்!
தேவைக் கேற்ற பொருள் பெறுவீர்
ஒன்றாய் வாழ்வதே அறிவுடமை
உலகப் பொருளெல்லாம் பொதுவுடமை

சோர்ணம் பாடல்: கு. மா. பாலசுப்ரமண்யம்

புவிமேல் மானமுடன் உயிர் வாழ
வழியேதும் இல்லையே
பெண்ணாகப் பிறந்தாலே—வாழ்வில்
என்னாளும் துயர்தானே—உன்
ஆசைக் கனவெல்லாம் மண்ணாகிப்போனதே
கண்ணிருந்தும் நீ வழி தடுமாறி
பெண்மை மறந்தாயே
காதலெனும் பெரும் போதையினாலே
வேதனை யடைந்தாயே (பெ)

கானல் வெளியை நீரென நம்பி
மானம் அழிந்தாயே! மானம் அழிந்தாயே
கண்ணகிதோன்றிய மண்ணில் பிறந்தும்
கற்பை இழந்தாயே! நீ
இன்னமும் வாழ்வாயோ! உலகில் இன்னமும் வாழ்வாயோ!...

சுசீலா　　　　　பாடல்: கே. பி. காமாட்சி சுந்தரம்

வசந்த முல்லேயும் மல்லிகையும் அசைந்தே ஆடிடுதே
இசைந்த காதலன் சேகரனே
மனம் நாடுதே—என் மனம் நாடுதே—　　　(வசந்த)
உயர்ந்த வானவில் போலே—உடை
ஒய்யாரமாய் அணிவேனே இனி நானே—என்
அழகெனும் போதையில் தானே—மயங்கி
ஆடிடச் செய்திடுவேனே
உள்ளத்தில் இன்பம் பெறவே
நான் பாடுவேன்......
அன்பாய் பேசினல்—நான்
வம்பாய் பேசுவேன்—என்பால்
வாவென்ருல்......எட்டி ஓடுவேன்　　　(வசந்த)

சேகர்—சுசீலா　　　　　பாடல்: கே. பி. காமாட்சி சுந்தரம்

சுசீலா: படுத்துறங்கும் போதினிலே
பட்டப் பகல் வேளேயிலே
அடுத்தொருவன் செய்த—பொல்லா
அக்ரமத்தை என்ன சொல்வேன்
அக்கம் பக்கம் யாருமில்லே
மிக்க ஆசை கொண்டொருத்தன்
கிட்ட வந்தான்—ஒருத்தன் கிட்டவந்தான்

சேகர்: ஆ!

சுசீலா: ஊம்:!
வெள்ளிக் கெண்டை போட்ட வேட்டி கட்டி
கெம்பீர நடை நடந்து
கிட்டவந்தான்.........
ஒருத்தன் கிட்டவந்தான்?

சேகர்: யாரவன்?

சுசீலா: வாச—சந்தனம் சவ்வாது பூசிச்
சொந்தக்காரன் போலப் பேசிக்
கிட்ட வந்தான்...　　　(ஆ)
கண்-உறக்கம் நீங்கி முளிச்சிப் பார்த்தேன்
உத்துப் பார்த்திட்டான்
முன்—பழக்கமான ஆளெப்போலப்
பார்த்துச் சிரிச்சிட்டான்

என்—உதவிக்காக ஆளைத்தேடி
அழுதும் பார்த்திட்டேன்—நான்
அவன் பயப்படாதே என்று சொல்லிப்
பக்கம் இருந்திட்டான

சேகர்: அப்புறம்?

சுசீலா: அடி—கட்டிக்கரும்பே கல் கண்டே
கட்டாணி முத்தே என்றென்னைத்
தொட்டணைத்தான்—என்னைத்
தொட்டணைத்தான்—காலால்
எட்டி உதைத்தேன்—சிரித்தான்
இன்னொரு உதை கொடென்று
தொட்டணைத்தான்—என்னைத்
தொட்டணைத்தான்

சேகர்: அப்படியா? நீ என்ன செய்தே

சுசீலா: மனம் பதறிக் கையை உதறித் தள்ளிப்
பார்த்தேன் முடியலே......
நான் பயந்து ஓட நினைத்தேன்
ரெண்டு காலும் நடக்கல்லே
நான் அசந்து போன நிலையைக் கண்டு
அறிவில்லாதவன்—அந்த
அறிவில்லாதவன்—நான்
இசைந்ததாக எண்ணி—என்னை
இறுக அணைத்திட்டான்—என்னை
இறுக அணைத்திட்டான்

சேகர்: ஐயையோ!

சுசீலா: அது மட்டுமா
சிறு சிட்டுப் போலப் பேசும்
நல்ல சீனத்துக் கிளி என்றென்னை
முத்தமிட்டான் என்னை முத்தமிட்டான்

சேகர்: என்ன! நீ சும்மாவா இருந்தே

சுசீலா: நான் என்ன செய்வேன்?
பார்த்தவர்கள் ஆசை கொள்ளும்
பருவம்—வயது ரெண்டு

சேகர்: என்ன?.........

சுசீலா: ஆமாம் அப்ப எனக்கு வயது ரெண்டு—என்
தாத்தா என்னை எடுத்துத்
தாலாட்டி முத்தமிட்டார்

சுசீலா பாட்டு புரட்சி கவிஞர் பாரதிதாசன்

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்கமாட்டாயா—எமக்
கின்பம் சேர்க்க மாட்டாயா
அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா கண்ணே
அல்லல் நீக்க மாட்டாயா
அன்பும் எளிமையும் சூழும் நாட்டில்
வாழ்வில் உணர்வு சேர்க்க—நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்ட மாட்டாயா
அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே
அறிகிலாத போதுயாம்
அறிகிலாதபோது—தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக்காட்ட மாட்டாயா......நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா (து)

சேகர்

நீ அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்ட மாட்டாயா—கண்ணே
ஆடிக் காட்ட மாட்டாயா

பாடல்:- கே. பி. காமாட்சி சுந்தரம்

ஜிப்ஸி நடனம்

ஆ...அரும்பு போல் மீசை வைத்து
அரக்கை கோட்டு மாட்டி
குறும்பான வாலிபத்தின் கோளாறால்—தன்னை
விரும்பாத பெண்டுகளை நடு வீதியில்
பாத்துப் பாத்து கண்ணு ரெண்டும்
பார்வை மங்கிப் போனதே
காத்து காத்து நின்னு நின்னு
காலும் ஓஞ்சிப் போனதே (பா)
ஓ டியாலோ டியோ டியோ டியோ

சு: எடுப்பாரு ஐயா குடுப்பாரு
குடுப்பாரு தங்கக் கையாலே
ஐயா தரும குணத்தை இப்ப பாரு

பத்: ஊஹூம் தம்பிடி குடுக்க மாட்டாரு

சே: இல்லே எடுப்பாரு ஐயா கொடுப்பாரு
குடுப்பாரு இப்ப புது நோட்டுதான்

இரு: டியாலோ டியோ டியோ

மூவ: ஓடியோ! ஓடியோ! ஓடியோ

சு: இவர் முறுக்கு மீசை வெகு ஜோக்கு

பத்: பொம்பளை மோகம் கொண்டு சிவந்த மூக்கு

சு: தருவாரே ஐயா கையாலே நோட்டு

பத்: வீண் பேராசை கொள்ளாதே நீ—குடுப்பாரு டேப்பு

சு: இல்லேடி புது நோட்டுத்தான்

பத்: இல்லே டேப்புத்தான்

சு: நோட்டுத்தான்
ஊய்...கையைப் போடுறாடி—அதோ
ஜோப்பில் கையைப் போடுறாடி

பத்: ஊய்...ஜோக்குக் காட்டி ஏய்க்கிறாடி
ஐயா ஜோக்குக் காட்டி ஏய்க்கிறாடி

இரு: சும்மா சும்மா பாக்குறாடி பாக்குறாடி

சு: ஐயா கடைக் கண்ணாலே பார்த்துக் கொடுக்கும் கர்னந்தானடி

பத்: ஊஹூம்

சு: டிப்டாப்பா பொம்பளையைப் பத்தீங்க

பத்: திருடன் கிட்டே மணி பர்சைச் சேர்த்தீங்க

சு: பழகாத பெண்ணைப் பார்த்து சிரிக்காதிங்க

பத்: முன் பின் - பழகாத பெண்ணைப்.........
பார்த்துச் சிரிக்காதீங்க......... (ஐயா)

சு: முதுகில் தலைகாணி கட்டிக் கோணும்
மறக்காதீங்க......... (ஐயா)

பத்: பெண்டாட்டிக்குத் துரோகம் செய்யலாமா
தாலி கட்டின பெண்டாட்டிக்குத் துரோகம்
செய்யலாமா

போர வார பொண்ணுங்க மேலே
ஆசை வக்கலாமா
வணக்கம் சார்! வணக்கம் சார்!
வணக்கம் சார்! வணக்கம் சார்!

பாடல்:- கே. பி. காமாட்சி சுந்தரம்

என்ன உலகமடா - இது என்ன உலகமடா -இது
ஏழைக்கே நரகமடா (எ)
தன்னலப் பேய்களுக்கே - இது
தங்கச் சுரங்கமடா (எ)
தில்லு முல்லுகள் செய்தே
திருடும் குபேர னெல்லாம்
அல்லல் படும் ஏழையைக்
கள்ளனென்று ஏசுகின்றார்
அல்லல் படும் ஏழையை கள்ளனென்று ஏசுகின்றார் (எ)
கட்டத் துணியுமின்றி - மக்கள்
கட்டத் துணியுமின்றி கந்தல் பொறுக்கையிலே
மொட்டைக் கதவு ஜன்னல் எல்லாம்
பட்டாடை போர்த்து கின்றார்
வீடு கட்டும் பாட்டாளி வீதியிலே தூங்குகின்றார்
கூடியந்த மாடியிலே கும்மாளம் போடுகின்றார் (எ)
பானையில் கஞ்சி யின்றி பட்டினியால் வாடுகின்றார்
வீணர்கள் தின்று மிஞ்சி வீதியிலே போடுகின்றார்
ஏய்த்துப் பிழைப்பவர்க்கே - ஊரை
ஏய்த்துப் பிழைப்பவர்க்கே - இங்கே
இந்திர போகமடா - இது
எல்லோர்க்கும் இல்லையடா......

பாடல்.-கே. பி. காமாட்சி சுந்தரம்
குரத்தி நடனம்

ஓ சாமி !
ஐயா சாமி! ஆவோஜி சாமி!
ஐயா ராய்யா வாய்யா, யூசமய்யா
ஐயா சாமி! ஆவோஜி சாமி!
நரிக் கொம்பிருக்கு வாங்கலையோ!
ஐயா சாமி......ஓ ஐயா சாமி

கோழி ஆட்டைப் பிடிக்கும் எங்கக் குள்ள நரி
ஏழை ரத்தம் குடிக்கும் இங்கே உள்ள நரி
பல்லிழிச்சுக்காட்டி பட்டம் பதவி தேடி
கட்சிப் பேரைச் சொல்லி ஊரை ஏமாத்திடும் (ஐயா சாமி)

வேட்டையாடிப் பிழைக்கும் எங்க காட்டு நரி
மூட்டைக் கட்டிப் பதுக்கும் உங்கள் நாட்டு நரி
வேலே ரொம்ப வாங்கும் கூலி தர ஏங்கும்
பட்டினியைப் பார்த்துப் புளி யேப்பம் விடும் (ஐயா சாமி)

காட்டிலுள்ள நரி ரொம்ப நல்லதுங்க
நாட்டிலுள்ள நரி ரொம்ப பொல்லாதுங்க

குள்ள நரிக் கொம்பை கோத்துப் போடு சாமி
புள்ளெ குட்டிக்காச்சும் புத்தி வரும் (ஐயா சாமி)

பாட்டு: மகாகவி பாரதியார்

ரத்தினம்: கொட்டு முரசே! கொட்டு முரசே!
கொட்டு முரசே! கொட்டு முரசே!
அன்பென்று கொட்டு முரசே!—மக்கள்
அத்தனே பேரும் நிகராம்...

சுசிலா: இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கேட்டால்

சேகர்: சாதிக் கொடுமைகள் வேண்டாம்
அன்பு தனில் செழித்திடும் வையம்

ரத்தினம்: ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

எல்லோரும்: ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே... இந்த
நானில மாந்தருக் கெல்லாம்!

வணக்கம்!

## நடிகர்கள்

| | |
|---|---|
| கே. ஆர். ராமசாமி | ரத்னம் |
| டி. கே. சண்முகம் | கருணாகரத்தேவர் |
| டி. எஸ். பாலையா | ஜெகவீரன் |
| ஏ. நாகேஸ்வர ராவ் | சேகர் |
| டி. எஸ். துரைராஜ் | கம்பவுண்டர் |
| கே. ராமசாமி | அகராதி |
| எஸ். வெங்கட்ராமன் | குடியானவன் |
| என். எஸ் நாராயணபிள்ளை | கணக்கப்பிள்ளை |
| துரைசாமி | தாத்தா |
| டி. எஸ். தக்ஷிணாமூர்த்தி | பப்ளிக் பிராசிக்யூட்டர் |

## நடிகைகள்

| | |
|---|---|
| லலிதா | சுசீலா |
| பி. எஸ். சரோஜா | சொர்ணம் |
| முத்துலெட்சுமி | பவானி |
| அங்கமுத்து | வேலைக்காரி |

மற்றும் பலர்

கதை—வசனம்

**அறிஞர் அண்ணாத்துரை** எம். ஏ

**பாடல்கள்:**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், டி. கே. சண்முகம்,
கே. பி. காமாட்சி சுந்தரம், கு. மா. பாலசுப்ரமணியம்

**பின்னணிப் பாடல்கள்**

எம். எல். வசந்த குமாரி, பகவதி, ராஜேஸ்வரி, வர்மா

**நடனம்:**

லலிதா—பத்மினி, குமாரி கமலா, லக்ஷ்மிகாந்தம்

**டைரக்ஷன்:—ப. நீலகண்டன்**

**மேற்பார்வை:—ஏ. வி. மெய்யப்பன்**

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1